செ.வெ.எண்:58 நாள்:29.07.2016

# பத்திரிகைச் செய்தி

தமிழ்நாட்டில் 31.03.2014 அன்றைய நிலவரப்படி 9.68 இலட்சம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் உள்ளன. இத்தொழில் நிறுவனங்களிலும், புதியதாக ஏற்படுத்தப்படும் தொழில் நிறுவனங்களிலும் தேவைப்படும் மனிதஆற்றலை வழங்கிடும் வகையிலும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் “அம்மாதிறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புதிட்டம்” என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், 18 முதல் 25 வயது வரையிலான பொறியியல், தொழிற்கல்வியியல், தொழில்பட்டயப்படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற வேலையில்லாத இளைஞர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி அளிக்கப்படும். இதன்படி குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் 6 மாதங்களுக்கான வேலை குறித்த பயிற்சியினை இளைஞர்களுக்கு அளிக்கும். பயிற்சி காலத்தில் தொழில் நிறுவனங்கள் மாதம் 5000 ரூபாய் உதவித் தொகை வழங்கும். ஆறு மாத பயிற்சி முடிந்தவுடன், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 12000 ரூபாயினை அரசு வழங்கும். 6 மாத பயிற்சிக்குப் பிறகு, பயிற்சி பெற்றவர்களின் திறமை, தேசியதிறன் மேம்பாட்டுக்கழகத்தால், அதாவது National Skill Development Corporation -ஆல் அறியப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்தச் சான்றிதழ் பெறுவதற்கான கட்டணத்தையும் அரசு வழங்கும். ஆறு மாத பயிற்சி முடித்த இளைஞர்களை தொழில்நிறுவனங்கள் வேலைக்கு அமர்த்திக்கொள்ளும். வேலையில் சேர்த்துக் கொண்டபின் வழங்கப்படும் ஊதியம் 5000 ரூபாய் அல்லது தொடர்புடைய சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் இவற்றுள் எது உயர்ந்ததோ அத்தொகை சம்மந்தப்பட்ட நிறுவனங்களால் வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 250 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இதில் 30 சதவீதம் மகளிருக்கென ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டம், படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் தகுந்த ஊதியத்துடன் கூடிய பயிற்சியினை பெற்று வேலைவாய்ப்புகளை பெற வழி வகுக்கும்.

மேற்படி திட்டத்தில் பொறியியல், தொழிற்கல்வியியல், தொழில் பட்டயப்படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற வேலையில்லாத இளைஞர்கள் தங்களின் பெயர், கல்வித்தகுதி, பயிற்சி பெற விரும்பும் தொழில் மற்றும் முழுமுகவரியுடன் புதுக்கோட்டை மாவட்டதொழில் மைய அலுவலகத்திற்கு விண்ணப்பிக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**